ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2411/56 - 2024 නොවැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2024.11.22
2411/56 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டம்*

2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், பின்வரும் ஒழுங்குவிதிகளை பிரகடனப்படுத்துகின்றேன்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2024, நவெம்பர் 22.

**ஒழுங்குவிதிகள்**

1. இந்த ஒழுங்குவிதிகள் **"2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதிச் சட்டம் - வர்த்தக மைய ஒழுங்குவிதிகள்"** என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 2019, திசெம்பர் 05 ஆந் திகதிய 2152/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதிச் சட்டம் - வர்த்தக மைய ஒழுங்குவிதிகள், 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதிச் சட்டம் - வர்த்தக மைய ஒழுங்குவிதிகளால் திருத்தப்பட்டவாறான 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதிச் சட்டம் - வர்த்தக மைய ஒழுங்குவிதிகளின் இல. 2அ ஒழுங்குவிதிகளின் உடனடுத்து பின்வரும் ஒழுங்குவிதிகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுவதுடன் அதன் 2ஆ இலக்க ஒழுங்குவிதிகளாக பயன்வலுப்பெறச் செய்தல் வேண்டும்.

1A - PG 6921 — 429 (2024/11)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2ஆ. 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வர்த்தக மைய ஒழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி இல. (2)(1)(a)(i) இருந்தபோதிலும், பின்வரும் நிபந்தனைக்கு அமைவாக, 2024 நவெம்பர் 22 முதல் அமுலுக்கு வரும் 03 மாத காலப்பகுதியில் (2025, பெப்புருவரி 21 வரை) M/s Laugfs Gas PLC ஊடாக M/s Laugfs Terminals Limited இனால் 9,000 மெற்றிக் தொன் எல்.பி. எரிவாயு உள்நாட்டு விற்பனைக்கு இதன் மூலம் அனுமதிக்கப்படுகிறது.

(i) M/s Laugfs Terminals Limited ஆனது, கைத்தொழில் வாடிக்கையாளர்களுக்கு விநியோகிப்பதை விட முன்னுரிமை அடிப்படையில் வீட்டுப் பாவனையாளர்களுக்கு எல்.பி. எரிவாயு வழங்குவதை உறுதி செய்தல் வேண்டும் ;

(ii) M/s Laugfs Terminals Limited ஆனது, குறித்த 03 மாத காலத்திற்குள் M/s Laugfs Gas PLC இற்கு அங்கீகரிக்கப்பட்ட அளவான 9,000 மெற்றிக் தொன்னிற்குள் மாதாந்த உள்நாட்டு விற்பனை அளவான 3,000 மெற்றிக் தொன்னினை விஞ்சக் கூடாது. எவ்வாறாயினும், இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக கருதப்படும் 03 மாத காலப்பகுதியில் M/s Laugfs Terminals Limited மூலம் மீள்-ஏற்றுமதி செய்யப்பட்ட எல்.பி. எரிவாயுவின் பங்காக 3,000 மெற்றிக் தொன்னிற்கு அப்பால் உள்நாட்டு விற்பனைக்கு எந்த தடையும் இல்லை;

(iii) உள்நாட்டு சந்தையில் எல்.பி. எரிவாயுவின் கேள்வி மற்றும் தொடர்ச்சியான விநியோகத்தினை உறுதி செய்வதற்கு M/s Laugfs Gas PLC குறைந்தபட்சம் 7,500 மெற்றிக் தொன் எல்.பி. எரிவாயு இருப்பைப் பேணுதல் வேணடும்;

(iv) M/s Laugfs Gas PLC இந்த ஒழுங்குவிதிகளின் மூலம் வழங்கப்படும் மேலதிக ஒதுக்கீட்டின் கீழ் அதன் கடந்த மாத விற்பனையை விஞ்சக்கூடாது;

(v) M/s Laugfs Terminals Limited, 2019 முதல் 2024 செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் அதன் உள்நாட்டு விற்பனையை கணக்கிணக்கம் செய்வதற்காக அதன் வருடாந்த மீள்-ஏற்றுமதி அளவை அதிகரித்தல் வேண்டும்;

(vi) M/s Laugfs Terminals Limited, 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வர்த்தக மைய ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின்படி உள்நாட்டு விற்பனை மீதான நிறுவன வரிகள் உட்பட ஏற்புடைய அனைத்து வரிகளையும் செலுத்துதல் வேண்டும்;

(vii) இலங்கை முதலீட்டுச் சபை மாற்று ஏற்றுமதி சந்தைகளைக் கண்டறிவதற்கான முயற்சிகள் உட்பட, இந்த ஒழுங்குவிதிகள் அமுலுக்கு வந்த நாளிலிருந்து இரண்டு மாதங்களில் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்தல் வேண்டும்; மற்றும்

(viii) முன்மொழியப்பட்ட 03 மாதங்கள் அல்லது அடுத்த மாதங்களின்போது 9,000 மெற்றிக் தொன் எல்.பி. எரிவாயு விற்பனையை முடித்தவுடன் M/s Laugfs Terminals Limited ஆனது, 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதிச் சட்டம்-வர்த்தக மைய ஒழுங்குவிதிகளின் அனைத்து ஏற்பாடுகளுக்கும் இணங்கியொழுதல் வேண்டும்.

EOG 11- 0173

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.